பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

# The Evolution of worship Traditions in Tamil Literature

**Dr. D. Maheswari,** Editor, International Journal of Tamil Language and Literary Studies, Virudhunagar, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120**
**DOI: 10.5281/zenodo.19533526**

## Abstract

*Tamil literature is an excellent source of culture, life and psyche of Tamil society. It is one of the oldest civilisations in the world. This article examines the changes, development and philosophical evolutions in the worship of Tamils from the Sangam period to modern literature. The life of the ancient Tamils was in harmony with nature. Therefore, their early worship centred on the five elements of land, water, fire, air and sky, the minor deities formed based on them, and the worship of the nadugal for warriors who died a heroic death. The Tolkappiyam and Sangam literatures have clearly recorded this. Over time, during the Kapiya period (Silappadhikaram, Manimekalai), the influence of Jainism and Buddhism and the worship of native deities were widely documented in literature. The devotional literature that emerged during the Pallava and Chola periods (Devaram, Nalayiram Diviyapprabhandam) transformed worship into a social movement. Personal love for God and the philosophy of surrender became the centre of worship. Beyond rituals, the position that devotion is the path to salvation emerged. The Siddha literature that followed this severely criticised external worship and emphasised internal worship (the innermost is the great temple) and formless, immaterial worship. In contemporary literature, the thoughts of Bharathi and Bharathidasa that humanity is the best worship prevailed. Thus, this study summary indicates that the worship tradition of the Tamils began with awe-inspiring admiration for nature, expanded into the worship of the great deity subject to the rules of the Agamas, and finally ended in philosophical immaterial worship and humanity.*

**Keywords:** Tamil Literature, Worship Traditions, Bhakti Movement, Development.

## References

[1] Abirami Pattar. *Abirami Anthathi.* Uma Pathippagam, Chennai.
[2] M. Ariharan. "The Ula Books Sung in the Eleventh Thirumurai" *International Journal of Tamil Language and Literary Studies,* E-ISSN: 2581-7140, Volume - 8, SPL Issue - 1, August 2025, Pp. 20-34.
[3] Andal. *Thiruppavai. Naalayira Divya Prabandham*, Aazhvargal Aayvu Maiyam, Chennai.
[4] Ramalinga Adigalar. *Thiruvarutpa.* Vallalar Deiva Nilaya Veliyidu, Vadalur.
[5] Ilampuranar. *Tholkappiyam – Porulathikaram.* Kazhaga Veliyidu, Chennai, 1956.
[6] Ilango Adigal. *Silappathikaram: Aychiyar Kuravai.* U. Ve. Sa. Pathippagam, Chennai.
[7] U. Ve. Swaminatha Iyer. *Purananuru.* U. Ve. Sa. Pathippagam, Chennai.
[8] Gurusamy, Ma. Pa., editor. *Vallalar Oru Arimugam.* Madurai Kamaraj University, Madurai, 1977.
[9] Gurunathan, Tha. "Vallalarin Irai Neris Sindhanaigal." *Pandian Kovil Kalaigal Tamil Aayvithazh*, Vol. 1, Issue 1, November 2025, pp. 1–9.

[10] Sivavakkiyar. *Sivavakkiyar Paadalgal. Siddhar Ilakkiyangal*, Poombuhar Pathippagam, Chennai.
[11] Subramania Bharathiyar. *Bharathiyar Kavithaigal.* Mullai Pathippagam, Chennai.
[12] Subramania Iyer, A. V. *Tharkaalath Tamil Ilakkiyam.* Makkal Veliyidu, Chennai.
[13] Thirunavukkarasar. *Thevaram (Aindham Thirumurai).* https://shaivam.org/panniru-thirumurai/thirugnanasambandhar-thevaram-muzhuvathum/#gsc.tab=0 Accessed 11 September 2025
[14] Thirumoolar. *Thirumandiram.* Thiruvaavaduthurai Adheenam, Thiruvaavaduthurai.
[15] Duraisamy Pillai, Avvai Su. *Thiruvarutpa: Moolamum Uraiyum Aaraam Thirumurai.* Annamalai University, Chidambaram, 1989.
[16] Nakkirar. *Thirumurugatrupadai.* South India Saiva Siddhanta Noorpathippu Kazhagam, Chennai, 1977.
[17] Bharathiyar. *Bharathiyar Kavithaigal.* Bharathi Pathippagam, Chennai.
[18] Bharathidasan. *Bharathidasan Kavithaigal.* தமிழுக்கும் அமுதென்று பேர் - நூல்கள் தமிழ் - பாரதிதாசன் Accessed 11 September 2025
[19] Pachonthi. “Samakaalamum Ilakkiyamum.” *Thadari.* https://thadari.com/contemporary-contemporary-in-modern-literature-a-thadari-conversation/ Accessed 11 September 2025
[20] Manikkavasagar. *Thiruvasagam.* Sri Ramakrishna Math, Chennai.
[21] Mohana, A. “Veriyaattil Viriyum Pennulagam.” *Ungal Noolagam*, 21 March 2018. https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-mar18/34774-2018-03-21-05-26-09 Accessed 11 September 2025
[22] Meiyappan, Sa. *Siddhar Paadalgal.* Manivasagar Pathippagam, Chennai, 2006.
[23] Hemalatha, Thi. “Kotravai Vazhipaadu.” *Pranav Tamizhiyal Aayvithazh*, Vol. 2, Issue 2, March 2023, pp. 222–226.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

# தமிழ் இலக்கியங்களில் வழிபாட்டு மரபுகளின் பரிணாம வளர்ச்சி

**முனைவர் த. மகேஸ்வரி,** பதிப்பாசிரியர், தமிழ்மொழி மற்றும் இலக்கியப்
பன்னாட்டு ஆய்விதழ், விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120**
**DOI: 10.5281/zenodo.19533526**

**ஆய்வுச்சுருக்கம்**

*உலக மக்கள் அனைவரும் தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு, வாழ்வியல் மற்றும் உளவியல் கூறுகளை அறிந்துகொள்ள தமிழ் இலக்கியங்கள் மிகச்சிறந்த காலக்கண்ணாடியாக விளங்குகின்றன. பண்டைய மக்கள் வாழ்வு இயற்கையோடு இணைந்து இருந்தது. அதனால் தொடக்ககால வழிபாடு என்பது நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும் அடிப்படையாகக் கொண்ட சிறுதெய்வங்களையும் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கான நடுகல் வழிபாட்டையும் மையமாகக் கொண்டிருந்தது. இலக்கண நூலான தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியங்கள் வரை அனைத்தும் இதனைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை நூல்கள் எழுந்த காப்பியக் காலத்தில் சமணப் பௌத்த மதங்களின் செல்வாக்கு உருவாகின. தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் நூல்கள் எழுந்த பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் வழிபாட்டை ஒரு சமூக இயக்கமாகவே மாற்றின. நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகளும் இலக்கியங்களில் அதிகமாகக் காணப்பட்டன. இறைவன் மீதான தனிப்பட்ட அன்பும் சரணாகதித் தத்துவமும் வழிபாட்டின் மையமாக மாறி, சடங்குகளைத் தாண்டி பக்தியே முக்திக்கு வழி என்ற நிலைப்பாடு உருவாகிற்று. இதனைத் தொடர்ந்து வந்த சித்தர் இலக்கியங்கள் அக வழிபாட்டை வலியுறுத்தி நின்றன. பாரதி, பாரதிதாசன் போன்றோரின் சிந்தனைகள் மேலோங்கிய தற்கால இலக்கியங்களிலும் சிறந்த வழிபாடு பற்றிய கருத்துகள் அதிகமாகக் காணப்பட்டன. தமிழர்களின் வழிபாட்டு மரபு என்பது அச்சம் காரணமாக இயற்கையைப் போற்ற அரம்பித்து, பெருந்தெய்வ வழிபாடாக விரிவடைந்து, இறுதியில் தத்துவார்த்தமான அருவ வழிபாட்டிலும் மனிதநேயத்திலும் வந்து நிற்கிறது. சங்க காலம் தொடங்கி தற்கால இலக்கியங்கள் வரை தமிழர்களின் வழிபாட்டு முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், தத்துவார்த்தப் பரிணாமங்களையும் மற்றும் வளர்ச்சியையும் தமிழ் இலக்கியங்களில் வழிபாட்டு மரபுகளின் பரிணாம வளர்ச்சி எனும் இவ்வாய்வுக்கட்டுரை ஆராய்கிறது.*

**குறிப்புச்சொற்கள்:** தமிழ் இலக்கியம், வழிபாட்டு மரபுகள், பக்தி இயக்கம், வளர்ச்சி.

**முன்னுரை**

மனித குலத்தின் உணர்வுகளில் தோன்றிய ஒன்று இறை நம்பிக்கை. இதுவே காலப்போக்கில் வழிபாடாக உருமாறியது. தமிழ் இலக்கியங்கள் தமிழர்களுடைய வழிபாட்டு முறைகளின் பரிணாம வளர்ச்சியை மிகத் துல்லியமாகக் காட்சிப்படுத்துகின்றன. அச்சத்தின் காரணமாக இயற்கையை வணங்கிய ஆதி மனிதன் காலப்போக்கில் ஐவகை நிலத்தின் அடிப்படையில் தெய்வங்களை வழிபட ஆரம்பித்தான். அதனைத் தொடர்ந்து காப்பியங்களில் அறத்தின் வடிவமாகத் தெய்வங்களை வழிபாடு செய்த நிலையை அறியமுடிகிறது. அந்நிலை பக்தி காலத்தில் இறைவனோடு இரண்டறக் கலக்கும் பரவச நிலை வழிபாடாக மாற்றம்

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

அடைந்துள்ளது. பின்னர் வந்த சித்தர்கள் அகத்துக்கண் இறைவனைக் காணும் அக வழிபாட்டை மேற்கொண்ட செய்தியும் சித்தர் இலக்கியங்கள் மூலம் அறியப்படுகிறது. இலக்கியச் சான்றுகளுடன் தமிழர்களின் வழிபாட்டு முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், தத்துவார்த்தப் பரிணாமங்களையும் மற்றும் வளர்ச்சியையும் விரிவாக ஆராய்வதே தமிழ் இலக்கியங்களில் வழிபாட்டு மரபுகளின் பரிணாம வளர்ச்சி எனும் இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வழிபாடு**

வழிபாடு என்பது மனிதன் தனக்கு அப்பாற்பட்ட ஒரு பேராற்றலை அல்லது சக்தியை இறைவன் வடிவில் போற்றும் விதமாகத் தன் சூழ்நிலை சார்ந்து செய்யும் சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளின் வெளிப்பாடாகும். தமிழர் மரபில் வழிபாடு என்பது வெறும் சடங்காக மட்டுமன்றி, இயற்கை சார்ந்த வாழ்வியலோடு இணைந்தப் பண்பாடாகவே இருந்து வருகிறது. தமிழர்களின் வழிபாட்டு மரபுகளின் பரிணாம வளர்ச்சி மிக நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டுள்ளது. வழிபாடு என்பது தனிமனித விருப்பத்தைச் சார்ந்தது என்றாலும், அச்சமூக ஒற்றுமையையும் கலாச்சாரத் தொடர்ச்சியையும் பேணுவதில் முக்கியப்பங்கு வகிக்கிறது. இறைவனுடன் ஒன்றிணைதல், தமக்குக் கிடைத்த வாழ்வாதாரங்களுக்கும் இயற்கைக்கும் நன்றி செலுத்துதல் மற்றும் மனிதனை ஒரு நெறிமுறைக்கு உட்படுத்தி, நற்பண்புகளை வளர்க்க வழிபாட்டு முறைகள் உதவுகின்றன.

**தொல்காப்பியம்**

தமிழர்களின் மிகப் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம், தமிழர்களின் வாழ்வியலை அகத்திணை, புறத்திணை என இரண்டாகப் பிரித்து, அகத்திணை மாந்தர்களின் வாழ்விடங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காகப் பகுத்து ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு தெய்வத்தை வகுத்துத் தந்துள்ளது.

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும் (தொல். பொருளதி. அகத்திணையியல், நூ. 5)**

தமிழர்களின் வழிபாட்டு முறை ஐவகை நிலங்களைச் சார்ந்ததாக இருந்ததற்கு இந்நூற்பா ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும். முல்லை நிலத்திற்குத் திருமாலும், குறிஞ்சிக்கு முருகனும், மருதத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் தெய்வங்களாக வணங்கப்பட்டனர். இது இயற்கையையும், அந்தந்த நிலத்தின் தன்மையையும் சார்ந்து அமைந்த வழிபாட்டு முறையாகும்.

**சங்க இலக்கியம்**

சங்க இலக்கியம் தமிழின் மிகப் பழமையான இலக்கிய மரபைக் கொண்டது. இது கிமு 300 முதல் கிபி 300 வரை உள்ள காலகட்டங்களில் தோன்றிய இலக்கியமாகும். தமிழர்களின் வாழ்க்கை, பண்பாடு, அரசியல், காதல் மற்றும் போர் போன்ற பல்வேறு அம்சங்களை நுணுக்கமாகப் எடுத்துரைக்கிறது. சங்கங்கள் வைத்து படைக்கப்பட்ட இலக்கியங்களின் தொகுப்பே “சங்க இலக்கியம்” ஆகும். சங்க இலக்கியம் இரண்டு அடிப்படை உட்பிரிவுகளை உடையது. அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களாகும்.

**நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத் தொகை**

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு மற்றும் புறநானூறு போன்றவை எட்டுத்தொகை நூல்களாகும்.

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வள மதுரைக் காஞ்சி-மருவினிய**
**கோல நெடுநல் வாடை கோல்குறிஞ்சிப்பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து**

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை மற்றும் மலைபடுகடாம் ஆகிய பத்துநூல்களும் பத்துப்பாட்டு நூல்களாகும்.

மேற்கண்ட பழம்பாடல் வரிகள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் எவை எவை என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இவ்விலக்கியங்களில் கொற்றவை வழிபாடு, வேலன் வெறியாட்டுப் பதிவு மற்றும் நடுகல் வழிபாடு போன்ற வழிபாட்டு நிகழ்வுகள் காணப்படுகின்றன.

**கொற்றவை வழிபாடு**

தமிழ் இலக்கியங்கள் ‘கொற்றவை’ பாலை நிலத் தெய்வமெனக் குறிப்பிடுகின்றன. ‘கொற்றவை’ குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வமாகப் பழந்தமிழ் நூல்களிலே குறிப்பிடப்பட்டாலும், பிற்காலத்தில் பாலை நிலத்துக்கு உரிய தெய்வமாகவே பெரும்பாலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சங்க காலத்தில் 'கொற்றவை' வெற்றித் தெய்வமாக உள்ளது. போருக்குச் செல்லும் வீரர்கள் வெற்றியடையக் கொற்றவையை வழிபட்டுச் செல்லும் மரபும் இருந்துள்ளது. நக்கீரர், திருமுருகாற்றுப்படையில் முருகன் கொற்றவை மகன் என்றும் பழந்தமிழர் தொல்குடிச் சமூகத் தாய் கொற்றவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**ஆல்கெழுகடவுள் புதல்வ மால்வரை**
**மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே**
**வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ**
**இழையணி சிறப்பின் பழையோள் குழவி**
**வானோர் வணங்கு வில் தானைத்தலைவ (திருமுருகாற்றுப்படை, பா. 260)**

தமிழ்க் கடவுள் எனக் கருதப்படும் முருகனை, ‘கொற்றவை சிறுவ’ என்றும் ‘பழையோள் குழவி’ என்று கொற்றவையை முருகக் கடவுளின் தாயாகப் பழந்தமிழர் கருதியதையும் *திருமுருகாற்றுப்படை* குறிப்பிடுகினறன. *திருமுருகாற்றுப்படை* கொற்றவை வழிபாட்டின் சிறப்பையும் தொன்மையையும் காட்டுகிறது. இதன்மூலம் கொற்றவை வழிபாடு சங்க காலத்தில் வேரூன்றி இருந்ததையும், இத்தெய்வமே பிற்காலத்தில் காளியாகவும், துர்க்கையாகவும் பரிணாமம் பெற்றுள்ளது என்ற செய்தியும் புலப்படுகிறது.

**வேலன் வெறியாடல்**

சங்க இலக்கியங்களில் மிக அதிக அளவில் பாடப்பட்ட தெய்வம் முருகன் (சேயோன்). தமிழர்களின் ஆதித் தெய்வமாகக் குறிஞ்சி நிலக் கடவுளான முருகன் வணங்கப்படுகிறான். அகநானூறு, புறநானூறு மற்றும் திருமுருகாற்றுப்படை நூல்களில் முருகன் வழிபாடு பற்றிய செய்திகள் அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக 'வேலன் வெறியாடல்' என்பது முருக வழிபாட்டின் முக்கியக் அம்சமாக இருந்துள்ளது. நோயைத் தீர்க்கவும், குறி கேட்கவும் வேலன் என்ற பூசாரி வெறியாடி முருகனை வழிபாடு செய்வது 'வேலன் வெறியாடல்' ஆகும்.

**முருகயர்ந்து வந்த முதுவாய் வேல சினவல்**
**ஓம்புமதி சினவல் ஓம்புமதி (குறுந்தொகை, பா. 362)**

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

என்ற குறுந்தொகைப் பாடலில் வேலன் வெறியாட்டுப் பதிவு காணப்படுகிறது. சங்கப்பாடல்களில் வெறியாடல் அகம் சார்ந்த புனைவுகளில் முக்கிய இடம் பெறுகிறது. வெறியாடலில் பலியும் காணப்படுகிறது.

> **சங்கப் பாடல்களில் பல்வேறு சடங்குகள் இடம்பெற்றுள்ளன. பெண்சார்ந்த சடங்குகளுள் வெறியாடல் குறிப்பிடத்தக்கது. இந்த வெறியாடல் களவுக் காதலில் ஈடுபட்டு அதன் விளைவாக மெலிவு ஏற்பட்ட பெண்களுக்கு நிகழ்த்தப் படுவது. எட்டுத்தொகையுள் (கலித்தொகை, பரிபாடல் தவிர்த்து) 36 பாடல்கள் வெறியாடல் நிகழ்வினைச் சுட்டியுள்ளன. (அ. மோகனா)**

புலவர்கள் பலர் வெறியாடலினால் பெண்களுக்குத் துன்பமும் மன அழுத்தமும் ஏற்படுகின்ற நிலையையும் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். உதாரணம்: (குறுந்தொகை, பா. 111, 214, 253, 360, 362 அகநானூறு, பா. 138, 182, 232, 242, 292, 382, 388, 272, நற்றிணை, பா. 34, 47, 51, 173, 251, 273, 282, 288, 322, ஐங்குறுநூறு, பா. 241, 242, 243, 244, 245, 246, 247, 248, 249, 250). வழிபாடு என்பது இயற்கையோடு இயைந்ததாகவும் மனிதர்களின் அன்றாடப் பிரச்சனைகளுக்கானத் தீர்வைத் தேடும் ஒரு வழிபாட்டு நிகழ்வாகப் பரிணமித்திருந்ததையும் அறிமுடிகிறது.

**நடுகல் வழிபாடு**

சங்க கால வழிபாட்டு முறைகளில் வீரர்களைத் தெய்வமாக்குதல் மிகவும் தனித்துவமான 'நடுகல்' வழிபாட்டு முறையாகும். சங்க இலக்கியங்கள், நாள்தோறும் நடுகல் வழிபாட்டைப் பெண்கள் மேற்கொண்டனர் என்று கூறுகின்றன. நடுகற்களைத் தவறாது வணங்கினால் அரசனுக்கும் கணவனுக்கும் போரில் வெற்றி கிட்டும் என்றும் மழை மிகுதியாகப் பெய்யும் என்ற நம்பிக்கையும் பெண்களிடையே இருந்துள்ளது. நாட்டிற்காகவோ அல்லது ஆநிரைகளை மீட்கும் போரிலோ வீரமரணம் அடையும் வீரனின் நினைவாகக் கல் ஒன்று நடப்பட்டு வழிபடும் வழக்கம் தமிழர்களிடம் இருந்துள்ளது. இந்த நடுகற்களுக்கு மதுவும் மாமிசமும் படைத்து வழிபட்டு வந்துள்ளனர்.

கோப்பெருஞ்சோழன் இறந்தபின் அம்மன்னனுடைய நண்பரானப் பொத்தியார், மன்னரை நினைத்து வருந்திப்பாடுவதாக அமைந்தப் பாடலில் நடுகல் வழிபாட்டு செய்தியைக் காணமுடிகிறது.

> **துகளறு கேள்வி உயர்ந்தோர் புக்கில்;**
> **அனையன் என்னாது, அத்தக் கோனை,**
> **நினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தன்று;**
> **பைதல் ஒக்கல் தழீஇ, அதனை**
> **வைகம் வம்மோ; வாய்மொழிப் புலவீர்!**
> **நனந்தலை உலகம் அரந்தை தூங்கக்,**
> **கெடுவில் நல்லிசை சூடி,**
> **நடுகல் ஆயினன் புரவலன். (புறநானூறு, பா. 221)**

கோப்பெருஞ்சோழன் இறந்ததால் இப்பெரிய உலகம் மீளாத்துயருறுகின்றது. குறையில்லா நல்ல புகழையுடையவன் நடுகல்லாகி விட்டானே என புலவர் வருந்திப் பாடுவதிலிருந்து, புறநானூற்றில் 'நடுகல் வழிபாடு' செய்தி காணப்படுகிறது என்பது மெய்யாகிறது. இவ்வகையான வழிபாடு, தமிழர்கள் பொதுநலத்தோடு உயிர்நீத்த மக்களைத் தம்மிலிருந்து உயர்த்தித் தெய்வநிலையில் பார்த்த தன்மையினையும் நன்றியுணர்வையும் கண்முன்னே காட்சிப்படுத்துகின்றது. தெய்வங்கள் என்ற நிலை தமக்காக வாழ்ந்த சக மனிதனே என்ற ஆழமான சமூக உளவியல் கருத்தும் இதில் பொதிந்துள்ளது என்றும் எண்ணிக்கொள்ளாம்.

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

**காப்பிய இலக்கியம்**

சங்க காலத்திற்குப் பின் தோன்றிய இரட்டைச் காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும், தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட வழிபாட்டு முறைகளைப் பதிவு செய்துள்ளன. சிலப்பதிகாரத்தில் சமண, பௌத்த, சைவ மற்றும் வைணவ வழிபாடுகள் பற்றிய செய்திகளைக் காண முடிகிறது. குறிப்பாக ஆய்ச்சியர் குரவை, வேட்டுவ வரி மற்றும் குன்றக் குரவை ஆகிய காதைகள் நாட்டார் வழிபாட்டு மரபுகளைச் சிலப்பதிகாரம் விவரிக்கின்றன.

**ஆயர் பாடியில், எரு மன்றத்து,**
**மாயவனுடன் தம்முன் ஆடிய**
**வால சரிதை நாடகங்களில்,**
**வேல்நெடுங் கண் பிஞ்ஞையொடு ஆடிய**
**குரவை ஆடுதும் யாம்' என்றாள்**
**'கறவை, கன்று, துயர்நீங்குக (சிலப். மதுரைக். ஆய்ச்சியர் குரவை, 7: 3)**

குடத்தில் பால் உறைந்து கிடக்கும் என்று எதிர் பார்க்க அது தயிராக வில்லை; உறையாகவும் இல்லை. வெண்ணெயைக் காய்ச்ச முற்பட்டாள்; அது உருகவும் இல்லை; உறைந்து கிடந்தது. ஆட்டுக்குட்டி வழக்கமாகத் துள்ளி விளையாடாமல் அசைவின்றி பள்ளி கொண்டிருந்தது. பசுவோ எதற்கோ அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தது. அதன் கழுத்து மணி அறுந்து தானே கீழே விழுந்தது. இவை தீய நிமித்தங்கள், ஏதோ தீமை வர இருக்கிறது என்பதை உணர்ந்தனர். ஆய மகளிர் கூடித் தெய்வத்தைப் பாடுவது; குரவைக் கூத்து ஆடுவது என்று முடிவு செய்து, கண்ணகியை அழைத்துக் கொண்டு ஆடுவது தக்கது என்றனர்.

கண்ணன், பலராமனுடன் ஆயர் பாடியில் ஆடிய வாலசரிதை என்னும் கதையில் ஒரு பகுதி, நப்பின்னையோடு கண்ணன் ஆடியது. அதில் ஆய மகளிர் பங்கு கொண்டனர். "குரவை ஆடுவோம் வா" என்றாள் மாதரி. "கன்றுகளும் பசுக்களும் துயர் நீங்குக என்று கூறி குரவைக் கூத்து ஆடுவோம்" என்றனர். ஆயர்பாடியில் தீய நிமித்தங்கள் தோன்றியபோது, மாயோனை வேண்டி ஆய்ச்சியர்கள் குரவைக் கூத்து ஆடியதை இளங்கோவடிகள் இக்காப்பியத்தில் காட்சிப்படுத்தியிருக்கிறார். அதேபோல, கண்ணகி மதுரையை எரித்த பின் சேர நாடு சென்று தெய்வமாக மாறுவதையும், அவளுக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் கட்டிப் பத்தினிக் கடவுளாக வழிபடுவதையும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறுயிருக்கிறார். இதனை நடுகல் வழிபாட்டின் பரிணாம வளர்ச்சி என்றும் கூட சொல்லலாம். ஒரு கற்புடைப் பெண்ணைத் தெய்வமாகப் போற்றும் மரபின் தொடக்க நிலை இதுவாகும்.

**பக்தி இலக்கியம்**

தமிழர்களின் வழிபாட்டில் பொற்காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டம் ஆகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் இது 'பக்தி இலக்கியக் காலம்' என்று குறிப்பிடப்படுகிறது.

**நாயன்மார்கள்**

பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி இலக்கியங்கள் பலவற்றின் மூலம் ஓர் புதுமையான வளர்ச்சியை உண்டாக்கினர். இக்கால கட்டத்தில் தான் வழிபாடு, மனிதனின் தூய அன்பாகவும் உருகும் பக்தியாகவும் மாறியது. இறைவனைத் தமிழால் பாடி வழிபடும் புதிய மரபு உருவாயிற்று. அப்பர் இறைவனை எளிய நடையில் தனிப்பட்ட அன்போடு பாடி மகிழ்ந்தார். புறச் சடங்குகளை விட இறைவனை மனதால் நினைப்பதே பேரின்பம் என்றார் அப்பர்.

**ஆளாகார் ஆளானாரை அடைந்து உய்யார்**
**மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார் (தேவாரம், ஐந்தாம் திருமுறை, 5. 90. 3)**

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

அப்பர் தேவாரம், ஐந்தாம் திருமுறையில் மானிட வாழ்க்கையின் பயன், சிவபிரானை வழிபட்டு, அவரது அருளின் உதவியால் உலக மாயைகளிலிருந்து விடுபட்டு வீடுபேற்றினை அடைவதே என்கிறார். அதேபோல், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், பக்தியின் உச்சகட்ட தன்மையை வெளிப்படுத்துகிறது. இறைவனை நேருக்கு நேர் பார்த்துப் பேசுவது போன்றும், தனது சிறுமையையும் இறைவனின் பெருமையையும் ஒப்பிட்டு உருகும் தன்மையையும் திருவாசகத்தில் காண முடிகிறது.

**நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்நெஞ்சில்**
**நீங்காதான் தாள்வாழ்க (திருவாசகம், சிவபுராணம், 1-2)**

திருவாசக சிவபுராணம், இறைவன் ஒரு கணநேரம் கூடத் தன் நெஞ்சை விட்டு நீங்காமல் இருக்க வேண்டும் என்ற தீவிரமான வழிபாட்டு நிலையைக் காட்டுகிறது. நாயன்மார்களின் பக்தி அனைவராலும் போற்றப்படக் கூடியதாகவே இருந்தள்ளது.

**ஆழ்வார்கள்**

வைணவ சமயத்தில் திருமால் மீது அதிகப்பக்தி கொண்டு, பாசுரங்கள் பாடிய பன்னிரு அடியார்கள் ‘ஆழ்வார்கள்’ எனப்பட்டனர். இவர்கள் 6 முதல் 9ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை இயற்றி தமிழ் இலக்கியத்திற்கும் வைணவத்திற்கும் பெரும் தொண்டாற்றியுள்ளனர். உலகப் பற்றுகளைத் துறந்து திருமாலின் மீது பக்தி கொண்டு அப்பக்தியிலேயே மூழ்கியிருந்ததால் இவர்களுக்கு இப்பெயர் வந்துள்ளது. பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின் பெருமைகளைப் பாடிப் பரவசம் அடைந்துள்ளனர். ஆண்டாள் பாடிய திருப்பாவையில் ‘வழிபாடு’ பெண்களின் கூட்டுப் பிரார்த்தனையாகக் காணப்பட்டது. அதிகாலையில் எழுந்து இறைவனைப் பாடுவதும் விரதம் மேற்கொள்வதும் முக்கிய வழிபாட்டு முறைகளாகப் பெண்களால் செய்யப் பெற்றன.

**மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் (திருப்பாவை - 1)**

இறைவனின் குணநலன்களைத் தத்துவார்த்தமாக விளக்கி, அவனிடம் முழுமையாகச் சரணடையும் வழிபாட்டை முன்வைத்து நம்மாழ்வார் திருவாய்மொழியைப் பாடியிருக்கிறார். எல்லாத் துன்பங்களையும் போக்கும் இறைவனின் சுடர்விடும் திருவடிகளைத் தொழுது எழுவாயாக எனத் தன் மனத்திற்கே கட்டளையிடும் அகவழிபாட்டை நம்மாழ்வார் எடுத்துரைப்பது புலனாகிறது.

**சித்தர் இலக்கியம்**

தமிழ் இலக்கியங்களில் சித்தர் இலக்கியம் சிறப்பிடம் பெற்றவை. சித்து என்னும் சொல்லுக்கு மாயவித்தை, இரசவாதிகள் என்ற பொருளுண்டு. சித்தர்கள் சித்தி பெற்றவர்கள், அருள் பெற்றவர்கள் என்று அழைக்கப் பெறுகின்றனர். தமிழ் இலக்கியங்கள் பதினெண் சித்தர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன.

**மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியில் ஆற்றிய அறிவன் தேயமும் (தொல். புறத்., நூ. 16: 4, 5)**

இந்நூற்பாவில் வரும் அறிவன், கணியன் ஆகிய பெயர்கள் சித்தர்களைக் குறிப்பதாக இளம்பூரணர் விளக்கம் தந்தள்ளார். தமிழ்ச் சமயச் சிந்தனைகளின் ஆய்ராய்ச்சியிலும் சித்தர்கள் சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளனர். மேலும் மருத்துவம், இரசவாதம், சோதிடம் மற்றும் வானியல் முதலிய யோகப் பயிற்சிகளிலும் சித்து பெற்றவர்கள். சித்தர் இலக்கியங்களில் அருவ மற்றும் அக வழிபாடு பக்தி இலக்கியங்கள் பெருங்கோயில்களையும், திருமேனி (உருவ) வழிபாட்டையும் வளர்த்தெடுத்த நிலையில், அதற்கு முற்றிலும் மாறான ஒரு தத்துவப்

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

புரட்சியைத் தமிழ்நாட்டில் சித்தர்கள் உருவாக்கினர். திருமூலர் முதல் சிவவாக்கியர், பட்டினத்தார் வரையிலான சித்தர்கள் புறச் சடங்குகளையும், சாதி ஏற்றத்தாழ்வுகளையும், உருவ வழிபாட்டையும் கடுமையாக எதிர்த்தனர்.

சித்தர்கள் உடலே கோயில், உள்ளமே இறைவன் வாழும் இடம் என்ற உயரிய வழிபாட்டுத் தத்துவத்தை மக்களுக்குப் போதித்தனர். திருமூலர் சக மனிதனுக்குச் செய்யும் உதவியே இறைவனைச் சென்றடையும் உண்மையான வழிபாடு என்று தனது திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

**படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே (திருமந்திரம், பா. 1857)**

சித்தர் இலக்கியத்தில் சமய, வழிபாட்டிற்கு எதிராகக் கருத்துகள் மிகுதியாகக் காணப்படுகின்றன .குறிப்பாக,

**நட்டகல்லைத் தெய்வம் என்று நாலுபுட்பம் சாத்தியே**
**சுற்றிவந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா**
**நட்டக்கல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையில்**
**சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ (சிவவாக்கியர் பாடல்கள், 494)**

என்னும் சிவவாக்கியர் பாடல் உருவ வழிபாட்டைக் கேள்விக்குள்ளாக்கி மிகக் கடுமையாக விமர்சித்தப் பாடலாகும். இறைவன் நமக்குள் இருக்கும்போது, வெளியிலுள்ள கற்சிலையிடம் பேசுவது என்பது சமைக்கும் பாத்திரம் உணவின் சுவையை அறியாததற்கு ஒப்பானது என்று பகுத்தறிவுப் பூர்வமான வழிபாட்டைச் சித்தர்கள் வலியுறுத்தினர்.

**தாயுமானவர் மற்றும் வள்ளலார்**

18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தாயுமானவரும், வள்ளலாரும் மத நல்லிணக்கம், உயிரிரக்கம் இரண்டையும் வழிபாடாகக் கருதிப் போதித்தனர். தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மாவட்டத்தில், திருமறைக்காட்டு வேதாரண்யத்தில் சைவ வேளாளர் குலத்தில், கேடிலியப்ப பிள்ளை மற்றும் தாயார் கேசவள்ளி அம்மையார் இருவருக்கும் மகனாகப் பிறந்தவர் தாயுமானவர். இவர் தமிழ் மொழி, வடமொழி ஆகிய இருமொழிகளிலும் புலமைப் பெற்று, ராணி மங்கம்மாளின் பேரனான திருச்சிராப்பள்ளியை ஆட்சிபுரிந்த விசயரகுநாத சொக்கலிங்கரிடம் அரசக் கணக்கராகப் பணிபுரிந்தார். அப்போது இவர் தன்னிலை மறந்து இறைவியுடன் ஒன்றிப்போய் அரசவையில் ஆவணம் ஒன்றை கையால் கசக்கிப் போட, அதை அறியாத சபையினர் அரசனுக்கும் அரசிக்கும் அவமரியாதை செய்து விட்டார் என அவதூறு பேசினர். அதே சூழலில் திருவானைக்கா அகிலாண்டேசுவரி கோயிலில், அம்பாளின் ஆடையில் நெருப்புப் பற்றியதைக் கண்டு உடனே தாயுமானவர் நுழைந்து தம் கையால் கசக்கி, சிவாச்சாரியார்கள் கவனிப்பதற்குள் அந்த நெருப்பை அணைத்தார். அச்சிவாச்சாரியார்கள் உடனே ஓடோடி வந்து நடந்ததைக் கூற, தாயுமானவரின் சக்தியைப் புரிந்து கொண்டு மன்னர் மக்கள் அனைவரும் வியந்தனர் என்ற செய்தி அறியப்படுகிறது.

தமிழ் மொழியின் உபநிடதம் என அழைக்கப்படும் திருப்பாடல் திரட்டில் 56 தலைப்புகளில் 1452 பாடல்கள் காணப்படுகின்றன. இதில் 771 பாடல்கள் கண்ணிகளாகவும் 83 பாடல்கள் வெண்பாக்களாகவும் அமைந்துள்ளன. இவருடைய புகழுடைய 'பராபரக்கண்ணி' 389 கண்ணிகளைக் கொண்டுள்ளன. பராபரக்கண்ணியில், “அண்டகோடி புகழ்காவை வாழும் அகிலாண்ட நாயகி என் அம்மையே!” என்று அம்பாளைப் பாடியுள்ளார். 1736ஆம் ஆண்டு துறவு பூண்ட இவர் சித்தர் என்றழைக்கப்பட்டள்ளார்.

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

**எல்லாரும் இன்புற்று இருக்கா நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்றும அறியேன் பராபரமே! (பராபரக்கண்ணி 221)**

என்று தாயுமானவர் பாடியுள்ளார். தாயுமானவர் தமிழ்ச்சமயப் பாடல்கள் பாடி, சமரச சன்மார்க்க நெறியைப் பரப்பி, வள்ளலார் பாரதியார் இருவருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார். மட்டுவார்குழலியை மணந்து கனகசபாபதி என்ற மகவையும் பெற்று தமது இல்வாழ்வில் சிறப்புடன் வாழ்ந்தார். தவநெறியில் சிறந்து விளங்கிய தாயுமானவர், திருமூலர் மரபில் வந்த திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த மௌன குரு என்பவரிடம் உபதேசம் பெற்று, பல்வேறு திருத்தலங்களுக்கும் சென்று இறைவனைப்பாடி வழிபட்டு துறவு பூண்டுள்ளார். இவர் இறுதியில் இராமநாதபுரம் மாவட்டம் இலட்சுமிபுரம் என்னும் ஊரில் சமாதி அடைந்துள்ளார்.

வள்ளலார் என்றழைக்கப்படும் இராமலிங்க அடிகள் ஒரு படி மேலே சென்று, எந்த உயிருக்கும் துன்பம் தராமல் இருப்பதே உண்மையான வழிபாடு என்றார். இவர் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் உள்ள மருதூரில் புரட்டாசி 19 (5 அக்டோபர் 1823) இல் கருணீகர் குலத்தில் இராமையாபிள்ளை - சின்னம்மையார் இருவருக்கும் மகனாகப் பிறந்துள்ளார். 'வள்ளலார்' ஒரு சைவ சமய ஆன்மீகச் சித்தர் என்று போற்றப்படக்கூடியவர். சபாபதி, பரசுராமன், உண்ணாமுலை மற்றும் சுந்தராம்பாள் ஆகிய நால்வரும் உடன்பிறந்தவர்கள் ஆவார்கள். திருவருட்பா என்பது 5818 பாடல்கள் அமைந்த வள்ளலார் பாடிய திருமுறை நூலாகும். பசிப்பிணி போக்குவதே சிறந்த கடவுள் வழிபாடு என 'ஜீவகாருண்ய ஒழுக்கத்தை' நிலைநாட்டி ஜோதி வழிபாட்டை (அருட்பெருஞ்ஜோதி) அறிமுகப்படுத்தியவர்.

**அருட்பெருஞ் ஜோதி யருட்பெருஞ் சோதி**
**அருட்பெருஞ் ஜோதி யருட்பெருஞ் ஜோதி**
**அருட்சிவ நெறிசா ரருட்பெரு நிலைவாழ்**
**அருட்சிவ பதியா மருட்பெருஞ் ஜோதி**
**ஆகம முடிமேல் ஆரண முடிமேல்**
**ஆகநின் றோங்கிய வருட்பெருஞ் ஜோதி**
**இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்**
**அகமறப் பொருந்திய வருட்பெருஞ் ஜோதி**
**(திருவருட்பா, ஆறாம் திருமுறை, அருட்பெருஞ்ஜோதி அகவல்)**

ஆன்மிக ஒளி, கருணை மற்றும் சமத்துவம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு உயர்ந்த ஜோதி (ஒளி) வழிபாட்டு முறையே வள்ளலாரின் வழிபாட்டு முறையாகும். வள்ளலார் உருவ வழிபாட்டை மேற்கொள்ளவில்லை. தீபம் (விளக்கு) ஏற்றி வழிபடுவது முக்கியம் என்றார். (ஒளி = அறிவு + கருணை + இறை உண்மை). எல்லா உயிர்களும் சமம்; பசித்தவர்களுக்கு உணவு கொடுப்பது மிக உயர்ந்த வழிபாடு. இது வள்ளலாரின் "ஜீவகாருண்ய ஒழுக்கம்" என்று அழைக்கப்படுகிறது.

**கடவுள் ஒருவரே என்பது இராமலிங்க வள்ளலாரின் முதன்மையான இறைக்கோட்பாடு ஆகும். வள்ளலார் பல தெய்வவழிப்பாட்டைக் கண்டிக்கிறார். கடவுள் ஒருவரே. அவரை ஜோதி வடிவில் வழிபட வேண்டும் என்பதே அவர் முடிந்த முடிவான கடவுட்கொள்கை. (த. குருநாதன், ப. 2)**

யாகச் சடங்குகள் இல்லை; பலி கடுமையாக எதிர்க்கப்பட்டுள்ளது; வெளிப்புற அலங்கார வழிபாடு முக்கியமல்ல என்று ஒளி வழிபாட்டு முறையை மேற்கொண்டுள்ளார். வள்ளலார் ஒளி, உள் ஆன்மீக உண்மையைக் குறிக்கிறது என்கிறார். மேலும், இறைவனை வழிபடுவதில் பசியைப் போக்குவது "உணவளிப்பதே" உயர்ந்த வழிபாட்டு நிலையாகக் கருதியுள்ளார் என்பது புலப்படுகிறது.

**சிற்றிலக்கியம்**

கி.பி. 15, 16, 17ஆம் நூற்றாண்டுகளை சிற்றிலக்கியக் காலமென்று அழைக்கலாம். நாயக்கர் காலத்தில் தமிழில் சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றி வளர்ந்தன. அதனால் நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் எனலாம். சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்று கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல் என்ற பாட்டியல் நூல் கூறுகின்றது.

**பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்**
**தொண்ணூற் றாறுஎன்னும் தொகையதுஆம்**

பிள்ளைத்தமிழ் இலக்கிய வகை முதலாகப் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு வகைப்பட்டது பிரபந்தம். இந்த தொண்ணூற்றாறு வகைகளையும் தாண்டி பலவகை சிற்றிலக்கியங்கள் வளர்ந்தும் விரிந்தும் பிற்காலத்தில் கூடிவிட்டது. இந்த எண்ணிக்கையானது குறைந்தபட்சம் 186 என்றும் 417 என அதிகப்பட்சமாகவும் கூறப்படுகிறது. தமிழ் சிற்றிலக்கியங்களின் அமைப்பு தெய்வத்தை, மன்னனை, வள்ளலைப் புகழ்வது போல் அமைந்திருக்கும். பல சிற்றிலக்கியங்கள் தமிழ் மண் சார்ந்த, தமிழ் மரபு சார்ந்த கருத்துகேளாடு காணப்படுகின்றன. அதிலும் பக்தி சார்ந்த சிற்றிலக்கியங்கள் அதிகமாய் காணப்படுகின்றன.

அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி மட்டும் பாடுவது சிற்றிலக்கியம். சிற்றிலக்கியம் பாடல் எண்ணிக்கை அல்லது அடிகளின் எண்ணிக்கையின் அளவில் சிறியது. அகப்பொருள் அல்லது புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றி மட்டும் கூறும். கோவை போன்ற சில சிற்றிலக்கியங்கள் பல துறைகளைக் கொண்டு அமைகிறது. பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு சிற்றிலக்கியத்தில் விளக்கப்பட்டிருக்கும். எ.கா.: உலா இலக்கியம் தலைவன் உலாவரும் காட்சியை மட்டுமே சிறப்பித்துப் பாடப்படுவது.

சேரமான் பெருமாள் நாயனாரின் திருக்கையிலாய ஞானவுலா ஆதி உலா என்றழைக்கப்படுகிறது. இவ்வுலா தமிழில் உள்ள உலா அனைத்திற்கும் காலத்தால் முற்பட்டது. மூல இலக்கியமாதலின் ஆதி உலா என்று வழங்கப்படுகிறது.

சிவபுரத்தில் உள்ள அழகு நிறைந்த திருக்கோயிலிலுள்ள இறைவன் இனிதே வீற்றிருக்கும் காட்சியை அழகுற ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளதை,

***சீரார் சிவலோகம்தன்னுள் சிவபுரத்தில்***
***ஏரார் திருக்கோயில் உள்ளிருப்ப* (திருக்கைலாய ஞானஉலா, 9 வது கண்ணி)**

என்று இறைவன் வீற்றிருக்கும் காட்சியைப் புலப்படுத்துகிறார்.

உலா இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவனின் குடிப்பெருமை, ஆட்சிமுறை, நீதிமரபு, அழகு, கொடைத் தன்மை என்பன இடம்பெறும். அந்த வகையில் திருக்கைலாயஞான உலாவில் சிவனது சிறப்புக்களை கூறலாம்.

சிற்றிலக்கியங்களில் வழிபாட்டு முறைகள் மிகச் சிறப்பாகப் போற்றப்படக் கூடியதாய் அமைந்திருக்கின்றது. சோழர் மற்றும் நாயக்கர் காலத்தில் உருவான சிற்றிலக்கியங்களான உலா, தூது, கலம்பகம், பள்ளு, குறவஞ்சி போன்றவை இறைவனை நாயகனாகவும், பக்தர்களை நாயகியாகவும் பாவிக்கும் 'நாயகி-நாயக பாவ' வழிபாட்டை மேற்கொண்டுள்ளன. அபிராமி பட்டர் பாடிய அபிராமி அந்தாதி, அன்னை வழிபாட்டின் உச்சமாகப் பக்தி சார்ந்த சிற்றிலக்கியமாக விளங்கியது.

**உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன**

**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே (அபிராமி அந்தாதி, பா. 1)**

என்ற பாடலில், ஞானமும் நல் வித்தையும் பெற அம்பிகையை ஒளிவடிவாகவும், ஞானத்தின் வடிவமாகவும் வழிபடும் மரபு பதிவு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தற்கால இலக்கியம்**

தமிழர்களின் மிக நீண்ட இலக்கிய மரபில் தற்கால இலக்கியம் என்பதை நவீன இலக்கியம், இக்கால இலக்கியம் மற்றும் சம கால இலக்கியம் என்றும் அழைக்கின்றனர். தற்கால இலக்கியத்தை முதலில் நவீன இலக்கியம் என்றும் பின்னர் இக்கால இலக்கியம் என்றும் அழைத்து வருகின்றனர். அதில் ஓர் சர்ச்சை ஏற்படுகிறது.

> **தற்காலம் என்றால் யாருடைய தற்காலம்? எழுத்தாளரின் தற்காலம். இறந்த எழுத்தாளரின் படைப்புகளும் இந்தத் தலைப்புக்குள் இடம்பெறுகின்றன. இல்லாத ஒருவருக்கு இது எப்படித் தற்காலம் ஆகும்? இத்தகைய ஐயம் பேராசிரியர் ஒருவருக்கு வந்திருக்கிறது. ஒருவரின் வாழ்நாள்தான் அவருக்குத் தற்காலம். ஆகவே 'தற்கால இலக்கியம்' என்பது தன்வயப்பட்டது; தனிமனிதர் சார்ந்தது. அதற்கு மாற்றாகச் சற்றே விரிந்த காலத்தை உள்ளடக்கியதாக 'இக்காலம்' அமைகிறது எனக் கருதுகின்றனர். நவீன இலக்கிய வகைமை உருவாகித் தொடர்ந்து நிலவி வருவதால் அதன் 'தொடக்கம் முதல் இப்போது வரை' என்பதைக் குறிக்கும் வகையில் 'இக்காலம்' பயன்படுகிறது. இப்பாடப் பிரிவுக்குள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளியான பிரதாப முதலியார் சரித்திரமும் இடம்பெறலாம்; இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வெளியான 'பேட்டை'யும் இருக்கலாம். நாவல் இலக்கியம் தோன்றி நூற்றைம்பது ஆண்டுகளைக் கடந்துவிட்ட போதும் இவை மொத்தமும் 'இக்காலம்' தான். (பச்சோந்தி)**

நவீனம் என்ற சொல் வடசொல் என்பதால் பெரும்பாலோனோர் இக்கால இலக்கியம் என்று பயன்படுத்துகின்றனர். இக்கால இலக்கியத்தின் பெரும்பாலான தலைப்புகள் மக்களின் பழக்கவழக்கம், பண்பாடு, உலகமயமாக்கல், இனம் மற்றும் பாலினம், சமத்துவமின்மை, காலநிலை மற்றும் சுற்றுச்சூழல், போர்கள் மற்றும் பயங்கரவாதம் போன்ற இன்றைய உலகின் சமகாலச் சூழலைக் கருத்தில் கொண்டே அமைக்கப்படுகின்றன.

1882 இல் திருநெல்வேலி மாவட்டம் (இன்றைய தூத்துக்குடி) எட்டயபுரத்தில் பிறந்த சுப்பிரமணிய பாரதி கவிஞரும், எழுத்தாளரும், இதழாசிரியரும், விடுதலைப் போராட்ட வீரரும், சமூக சீர்திருத்தவாதியும் ஆவார். நவீன தமிழ்க் கவிஞர்களின் முன்னோடியாகத் திகழ்ந்த பாரதிக்குக் கவிதையில் சிறந்து விளங்கியதற்காகப் "பாரதி" பட்டம் கிடைத்துள்ளது. தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதிகளில் ஒருவராகக் கருதப்படுகிற, "மகாகவி" இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது தேசபக்தியைத் தூண்டும் பாடல்களையும் பெண் விடுதலை, சாதி மறுப்பு மற்றும் குழந்தைத் திருமணத்திற்கு எதிரானக் கவிதைகளையும் படைத்து சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார். தமிழ் மரபு இலக்கணங்களை மீறி, உரை நடையில் பேசுவது போலவே எழுதி, நவீன உரைநடை பிறக்கக் காரணமானவர் பாரதி. பாரதியார் தம் பாடல்களில் காளி, கிருஷ்ணன் எனப் பல தெய்வங்களைப் பாடினாலும், அவரது வழிபாட்டுப் பாடல்களின் அடிப்படை தேசப் பக்தியாகவும், சாதி ஒழிப்பாகவும் மற்றும் மானுட விடுதலையாகவுமே அமைந்திருந்தன.

**காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்;**
**நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை;**
**நோக்க நோக்கக் களியாட்டம்.**

**(பாரதியார் கவிதைகள், ஞானப் பாடல்கள், ஐய பேரிகை)**

இயற்கையையும் உயிர்களையும் நேசிப்பதே சிறந்த வழிபாடு என்று பாரதி பாடுவது இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது. பாரதிதாசனோ, தமிழ் மொழியையே தெய்வமாக வழிபடும் நிலையில் தமது இலக்கியப் படைப்பைப் படைத்துள்ளார் என்பது ஆராயப்பட்டுள்ளது. உதாரணமாக.

**தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்**
**தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்**
**தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்**
**தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்**
**தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்**
**தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்**
**தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்! (தமிழுக்கும் அமுதென்று பேர்)**

தமிழ் மொழி வழிபாடு, இனப்பற்று ஆகியவையே தற்கால இலக்கியங்களில் முக்கிய வழிபாட்டு உணர்வுகளாகப் பாரதிதாசன் கவிதைகள் படைத்துள்ளமை வெளிக் கொணரப்படுகிறது. 20ஆம் நூற்றாண்டில் பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் வழிபாட்டு முறையில் புதிய பரிமாணங்களைச் சேர்த்தனர். இவ்வாறு காலகட்டங்களைப் பொறுத்து வழிபாட்டின் பரிணாம வளர்ச்சி மேம்பட்டுள்ளது. பாரதியார், பாரதிதாசன் போன்றே, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி மற்றும் பிற தற்கால இலக்கியவாதிகள் ஆகியோரின் படைப்புகளில் வழிபாட்டின் வளர்ச்சி நிலை பல்வேறு மாறுதல்களை அடைந்துள்ளது. வழிபாட்டின் வளர்ச்சி நிலையில் மரபு மீறல் கால மாற்றங்களைக் கட்டுடைத்து எழுதுதல் தற்காலப் படைப்புகளில்தான் பெரும்பாலும் நிகழ்ந்திருக்கின்றன.

**முடிவுரை**

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வழிபாட்டு முறைகளின் வரலாறு, மனிதனின் அறிவுசார் மற்றும் ஆன்மிகப் பரிணாம வளர்ச்சியின் சுவடுகளாகும். இயற்கையின் சீற்றங்களைக் கண்டு அஞ்சி, அச்சம் கொண்டு நிலம், நீர் மற்றும் நெருப்பு போன்ற ஐம்பூதங்களை வழிபட்ட சங்க கால மனிதன், பின்னர் தமக்காக உயிர் நீத்த வீரனை நடுகல்லில் கண்டு தெய்வமாகப் வணங்கியுள்ளான். காப்பியக் காலத்தில் அறமே தெய்வ வடிவமாகப் பார்க்கப்பட்டுள்ளது. பக்தி இலக்கியக் காலத்தில், இறைவனைத் தோழனாகவும், காதலனாகவும் மற்றும் தந்தையாகவும் பாவித்து, தமிழால் பாடி உருகும் உணர்ச்சிப்பூர்வமான வழிபாடு மேலோங்கியதைச் சான்றுகளுடன் அறியமுடிந்தது. பக்தி இலக்கியம் தமிழ்ச் சமூகத்தை ஒன்றிணைக்கும் பெருஞ்சக்தியாக விளங்கியுள்ளது. ஆடம்பரக் கோயில் வழிபாடுகளிலும் வெறும் சடங்குகளிலும் மதம் சிக்கிக்கொண்ட போது சித்தர்கள் தோற்றம் பெற்றனர். "உள்ளமே பெருங்கோயில், ஊன்உடம்பே ஆலயம்" என்று அகவழிபாட்டை மேற்கொண்டனர் சித்தர்கள். இடைக்காலத்தில் இஸ்லாமிய மற்றும் கிறித்துவ இலக்கியங்களும் (சீறாப்புராணம், தேம்பாவணி) தமிழில் தோன்றி, ஏகத்துவ வழிபாட்டையும் அன்பையும் போதித்து வந்துள்ளன. 19ஆம் நூற்றாண்டில் வள்ளலார் "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பாடி சீவகாருண்யமே (உயிரிரக்கம்) மிகச்சிறந்த வழிபாடு என்று உலகிற்கு எடுத்துரைத்த விதமும் போற்றப்படக்கூடியது. தற்கால இலக்கியங்களில் வழிபாடு என்பது கண்ணுக்குத் தெரியாத கடவுளைத் தேடுவதை விட, கண்முன் கஷ்டப்படும் மனிதனுக்கு உதவுவதாகவும், நாட்டை நேசிப்பதாகவும் மற்றும் மொழியைப் போற்றுவதாகவும் உருமாற்றம் அடைந்துள்ளது. தமிழ் இலக்கியங்களில் வழிபாடு என்பது புறத்தில் உள்ள இயற்கையை வணங்குவதில்

தொடங்கி, கோயில்களில் உள்ள சிலைகளை வணங்கி, இறுதியில் தனக்குள் இருக்கும் அறிவையும், சக மனிதனுக்கான அன்பையும் வழிபடும் உன்னத நிலையையும் அடைந்து வளர்ச்சி பெற்றுள்ளது. இதுவே தமிழ்ப் பண்பாட்டின் முதிர்ச்சியையும், உலகளாவிய மனிதநேயச் சிந்தனையையும் பறைசாற்றுகிறது தமிழர்களின் வழிபாட்டு முறைகளில் ஏற்பட்டுள்ள பரிணாம வளர்ச்சி உலகளாவிய அளவில் போற்றப்படக்கூடியது.

**குறிப்புகள்**


[1] அபிராமி பட்டர். *அபிராமி அந்தாதி.* உமா பதிப்பகம், சென்னை.

[2] மு. அரிஹரன். "பதினோராம் திருமுறையில் பாடப்பெற்ற உலா நூல்கள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்,* E-ISSN: 2581-7140, தொகுதி 8, சிறப்பிதழ் 1, ஆகஸ்ட் 2025, பக். 20-34.

[3] ஆண்டாள். திருப்பாவை. *நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம்.* ஆழ்வார்கள் ஆய்வு மையம், சென்னை.

[4] இராமலிங்க அடிகளார். *திருவருட்பா.* வள்ளலார் தெய்வ நிலைய வெளியீடு, வடலூர்.

[5] இளம்பூரணர். *தொல்காப்பியம் – பொருளதிகாரம்.* கழக வெளியீடு, சென்னை, 1956.

[6] இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம், 'ஆய்ச்சியர் குரவை'.* உ.வே.சா. பதிப்பகம், சென்னை.

[7] உ.வே. சாமிநாதையர். *புறநானூறு.* உ.வே.சா. பதிப்பகம், சென்னை.

[8] குருசாமி, மா. பா. (பதிப்பாளர்). *வள்ளலார் ஓர் அறிமுகம்.* மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1977.

[9] த. குருநாதன். "வள்ளலாரின் இறைநெறிச் சிந்தனைகள்." *பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்,* தொகுதி 1, இதழ் 1, நவம்பர் 2025, பக். 1-9.

[10] சிவவாக்கியர். *சிவவாக்கியர் பாடல்கள்.* பூம்புகார் பதிப்பகம், சென்னை.

[11] சுப்பிரமணிய பாரதியார். *பாரதியார் கவிதைகள்.* முல்லைப் பதிப்பகம், சென்னை.

[12] ஏ. வி. சுப்பிரமணிய அய்யர். *தற்காலத் தமிழ் இலக்கியம்.* மக்கள் வெளியீடு, சென்னை.

[13] திருநாவுக்கரசர். தேவாரம் (ஐந்தாம் திருமுறை). https://shaivam.org/panniru-thirumurai/thirugnanasambandhar-thevaram-muzhuvathum/#gsc.tab=0 செப்டம்பர் 11, 2025 அன்று அணுகப்பட்டது.

[14] திருமூலர். *திருமந்திரம்.* திருவாவடுதுறை வெளியீடு, திருவாவடுதுறை.

[15] துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு. *திருவருட்பா: மூலமும் உரையும் ஆறாம் திருமுறை.* அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1989.

[16] நக்கீரர். *திருமுருகாற்றுப்படை.* திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1977.

[17] பாரதியார். *பாரதியார் கவிதைகள்.* பாரதி பதிப்பகம், சென்னை.

[18] பாரதிதாசன். *பாரதிதாசன் கவிதைகள்.* தமிழுக்கும் அமுதென்று பேர் தமிழ் - பாரதிதாசன் - நூல்கள் செப்டம்பர் 11, 2025 அன்று அணுகப்பட்டது.

[19] பச்சோந்தி. *"சமகாலமும் இலக்கியமும்" - தடாரி* … https://thadari.com/contemporary-contemporary-in-modern-literature-a-thadari-conversation/ செப்டம்பர் 11, 2025 அன்று அணுகப்பட்டது.

[20] மாணிக்கவாசகர். *திருவாசகம்.* ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் வெளியீடு, சென்னை.

[21] அ.மோகனா. "வெறியாட்டில் விரியும் பெண்ணுலகம்" உங்கள் நூலகம், 21 மார்ச் 2018. https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-mar18/34774-2018-03-21-05-26-09 செப்டம்பர் 11, 2025 அன்று அணுகப்பட்டது

**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

[22] மெய்யப்பன், ச. *சித்தர் பாடல்கள்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006.

[23] முனைவர் தி ஹேமலதா. "கொற்றவை வழிபாடு", *ப்ரணவ் தமிழியல் ஆய்விதழ்*, தொகுதி 2, இதழ் 2, மார்ச் 2023, பக். 222-226.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.